1969 ஆகஸ்ட் 19]

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அப்படித் தயாரித்து, ஒரு சிறந்த விருந்து வைத்தால், அருந்துவதற்கு நாம் எல்லாம் தயாராக இருக்கிறோம்.

Beauty spots in the Nilgiris

*33 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state :

(*a*) Whether the Government have decided to maintain the beauty spots in the forest areas in the Nilgiris; and

(*b*) if so, the anticipated cost of such maintenance?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) நீலகிரி பிராந்தியத்தில் ஊராட்சி மன்றங்களின் நிர்வாகத்திலுள்ள அழகிடங்களை வனத்துறையின் பராமரிப்பில் மாற்றி, அத்துறை பராமரித்து வரவேண்டும் என்று ஒரு வேண்டுகோள், நீலகிரி சுற்றுலா வளர்ச்சிக் குழுவால் அனுப்பப்பட்டது. அது ஆலோசனையில் இருக்கிறது. முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை.

(இ) பராமரிப்புக்கான செலவை முன்னதாகவே இப்பொழுது தீர்மானிக்க இயலாது; ஏனெனில் அவ்வப்போது எழும் தேவைக்கேற்ப ஒவ்வொரு இடத்திற்கும் செலவு வேறுபடும்.

திரு. கே. விநாயகம் : தலைவர் அவர்களே, பொதுவாக, நீலகிரி மாவட்டத்தில் இருக்கிற மரம், செடிகொடிகள் அதிகமாக வெட்டி வீழ்த்தப்படுகிற காரணத்தில் இப்போது மழை, பருவகாலத்தில் பெய்வதில்லை. ஆகவே, இந்தமாதிரி தவறான முறையில் மரங்களை வெட்டுகிற விவசாயிகளுக்கு அரசு உத்தரவு அனுப்பி அதைத் தடுக்க முன்வருமா? மரங்களை வெட்டாமல் பார்த்துக்கொள்ள அரசு ஏதேனும் திட்டம் வைத்திருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, இப்போதைய கேள்வி காட்சி நலன் கனிந்த இடங்களைப் பொறுத்தது. அழகிய இடங்கள்தான் சுற்றுலா மாளிகையாக, சுற்றுலா இடங்களாக எடுத்துக்கொள்ளப்பட்டு, அதை அரசாங்கம் அழகு செய்து வருகிறது.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நீலகிரி மலையில் இருக்கின்ற எழில்பகுதிகளைப் போல ஜவ்வாது மலையிலும், ஏலகிரி மலையிலும், ஏற்காடு மலையிலும் பொதிகைமலையிலும் எழிற்பகுதிகள் நிறைய இருக்கின்றன. அத்தனை இடங்களையும் எழிற்பகுதி இடங்களாக மாற்றி, சுற்றுலா பயணிகள் கண்டுகளிக்கவும், தங்கி மகிழவும் ஆவன செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, சுற்றுலா பயணிகளின் வசதிகளுக்கேற்ற வகையில் பல அழகிய பகுதிகளை எடுத்து, மேலும் அழகுபடுத்தி ஏற்ற வசதிகளைச் செய்ய சுற்றுலா துறையினர் ஏற்பாடு செய்கிறார்கள்.

உறுப்பினர் அவர்கள் சில மலைப்பகுதிகளை அரசாங்கம் எடுத்துக் கொள்ளவில்லை என்று சொன்னார். எல்லா அழகிய இடங்களையும் இத்துறையின்கீழ் எடுத்துக்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளில் விரைவில் ஈடுபடலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜே. பெள்ளி கௌடர்: தலைவர் அவர்களே, எழிற் பகுதிகளாக எந்தெந்த இடங்கள் அரசாங்கத்தால் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கின்றன?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: தலைவர் அவர்களே, கல்லத்தி நீர்விழ்ச்சி, காதரைன் நீர்விழ்ச்சி, லாம்ப்ஸ் ராக், டால்பின்ஸ் நோஸ், லேடி கானிங் சீட், லோஜ் நீர்விழ்ச்சி, மோயார் நீர்விழ்ச்சி, தோட்டாபெட்டா சிகரம், மூகர்த்தி சிகரம், குலிகல் ட்ரூக் கோட்டை, பிக்னிக் கார்னர் கேர்ன் ஹில் ஆகிய இவைகள்தாம் அந்த இடங்கள். இந்த பதினொன்று இடங்களையும் நீலகிரி பகுதியில் எழிற்பகுதி நிறைந்த இடங்களாக தேர்ந்தெடுத் திருக்கின்றனர்.

குமாரம் அருகிலுள்ள சோதனைச் சாவடி

* 26 வினா.—திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு உணவு, வணிகத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், குமாரம் அருகிலுள்ள சுங்கச் சாவடியில் (Check Post) பணிபுரிந்து கொண்டிருந்த Special Revenue Inspector ஒருவர் சென்ற நவம்பர் முதல் வாரத்தில் தாக்கப்பட்டாரா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவர் அவர்களே, இந்த மாதிரியான நிகழ்ச்சி நடைபெற்றதும் அதன்மேல் உடனடியாக நடவடிக்கை எடுக்காமல், சட்ட சபையிலிருந்து கேள்வி போன பிறகுதான் விசாரணை ஆரம்பித்துள்ளது என்பது உண்மையா? அரசாங்கப் பணிபுரியும்போது அரசு ஊழியர் ஒருவருக்குக் காயம்பட்டாலும், ஊனம் எற்பட்டாலும், இறக்க நேரிட்டாலும் சம்பந்தப்பட்டவர்களுக்கு அரசாங்கம் என்ன நட்ட ஈடு வழங்குகிறது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, எப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதுபற்றிய விவரம் என்னிடத்தில் இல்லை. கள்ளக் கடத்தல் செய்பவர்கள் அந்த ஆய்வாளரைப் பயமுறுத்தினார்கள். உடனடியாக அலங்காநல்லூர் காவல் நிலையத்தில் புகார் செய்யப்பட்டது. அந்த நபர்களின் அடையாளம் கண்டுகொள்ள முடியாததால் அவர்கள் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை.